1271 ஒப்பந்த செவிலியர்களுக்கு கலந்தாய்வு நடத்தி - விரைவில்

நிரந்தர செவிலியர் பணி நியமன ஆணைகள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, நவ.12- முதலமைச்சர் அவர்கள் மிக விரைவில் 1271 ஒப்பந்த செவிலியர்களை நிரந்தர செவிலியர்களாக கலந்தாய்வு நடத்தி அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணிநியமன ஆணை வழங்க உள்ளார் என்றும் கோவிட் தொற்று காலங்களில் பணிபுரிந்த 954 செவிலியர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு பணி ஆணைகள் வழங்க உள்ளார் என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (11.11.2024) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடுஅரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் 2025-26ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக்கோரிக்கை குறித்தான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது :-

கடந்த நிதிநிலை அறிக்கையில் 110 அறிவிப்புகள் வெளியிடப்பட்டது. முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலோடு 2021 தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் 100க்கும் மேற்பட்ட அறிவுப்புகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு, அந்த அறிவிப்புகளின் நிலை குறித்து Coffee Table Book என்று சொல்லப்படுகின்ற புத்தகங்களை மருத்துவத்துறை வரலாற்றில் முதன்முறையாக ஆண்டுதோறும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நிதிநிலை நாளில் வழங்கி வருகிறோம். அந்த வகையில் அடுத்த ஆண்டு நடைபெறுகின்ற நிதி நிலை அறிக்கையிலும் கூட நடப்பாண்டிற்கான அறிவிப்புகளான நடந்து முடிவுற்றிருக்கும் பணிகள், நடந்துக் கொண்டிருக்கும் பணிகள், அரசாணை வெளியிடப்பட்டிருக்கும் பணிகள், நிதிஆதாரத்தை எதிர்நோக்கி காத்திருக்கும் பணிகள் என்று பல்வேறு வகைகளிலான பணிகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. துறையின் செயலாளர், துறையின் அனைத்து உயர்மட்ட அலுவலர்களும் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எல்லா பணிகளும் மிக வேகமாக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

1271 ஒப்பந்த செவிலியர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள்!

செவிலியர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரை இந்த அரசுப் பொறுப்பேற்ற பிறகு கோவிட் காலத்தில் தற்காலிக செவிலியர்களாக பணிக்கு அமர்த்தப்பட்டவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோவிட் காலத்தில் பணியாற்றியவர்களுக்கு அரசில் வாய்ப்பளிக்க வேண்டும் என்கின்ற அறிவுறுத்தலுக்கு ஏற்ப படிப்படியாக ஏற்படும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப அவர்களை பணியில் அமர்த்தி வருகிறோம். அந்தவகையில் கடந்த ஆண்டு மட்டுமே 1412 பேர் கோவிட் காலங்களில் பணியாற்றிய செவிலியர்களுக்கு அரசின் சார்பில் ஒப்பந்த அடிப்படையிலானபணிநியமனங்களாக அவர்கள் பணி அமர்த்தப்பட்டார்கள். இந்தநிலையில் தற்போது 1271 நிரந்தர காலிப்பணியிடங் களாக இருக்கின்றது. மொத்தமாக இருக்கும் 1271 செவிலியர் பணியிடங்கள் வருகின்ற 14.11.2024 மற்றும் 15.11.2024 ஆகிய 2 நாட்களில் ஏற்கெனவே ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் செவிலியர் பணியிடங்கள் அரசு விதிமுறைகளைப் பின்பற்றி கலந்தாய்வு நடத்தப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நிரந்தர பணி நியமன ஆணைகள் தரப்படவிருக்கிறது. இந்த அரசுப் பொறுப்பேற்ற பிறகு 24.12.2021 அன்று 251 பேருக்கும், 25.03.2022 - 109 பேருக்கும், 27.12.2022 - 569 பேருக்கும், 13.10.2023 அன்று 489 பேர் என ஆகமொத்தம் 1418 ஒப்பந்த செவிலியர்களை காலமுறை ஊதியத்தில் மாற்றப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்டனர். அந்தவகையில் 1271 பேருக்கு பணிஆணைகள் கலந்தாய்வு 14.11.2024 மற்றும் 15.11.2024 அன்று நடத்தப்பட அவரவர் விரும்பும் பணியிடங்களுக்கு செல்ல உள்ளனர். இவர்கள் போன பிறகு கோவிட் காலக்கட்டத்தில் பணிபுரிந்த 954 பேருக்கு பணி ஆணைகள் தர வேண்டும். இவர்கள் தான் கடைசி. எனவே அடுத்த வாரம் காலமுறை ஊதியத்தில் செவிலியர்களுக்கு பணியிடங்கள் தரப்படவும், 954 கோவிட் கால பணியாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி ஆணைகள் தரப்படும் நிகழ்வும் நடைபெற உள்ளது. இது முடிந்தவுடன் கோவிட் காலங்களில் பணிபுரிந்த செவிலியர்களுக்கு பணி தரப்படவில்லை என்கின்ற நிலை இருக்காது. இவர்களுக்கு பணிஆணைகள் வழங்கப்பட்ட பிறகு இன்னமும் துறையில் உள்ள காலிப்பணியிடங்கள் 300 வரை உள்ளது. இந்தப் பணியிடங்கள் அடுத்த வாரம் கலந்தாய்வு முடிவுற்றபிறகு இந்த 300 செவிலியர் பணியிடங்கள் மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2553 மருத்துவர் காலிப்பணியிடங்களுக்கு தேர்வு!

மருத்துவர் பணியிடங்களைப் பொறுத்தவரை ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில் இன்று வரை உள்ள காலிப்பணியிடங்கள் 1353, இந்த காலிப் பணியிடங்களை 2026 வரை கணக்கில் கொண்டு 2553 காலிப்பணியிடங்களுக்கு MRB மூலம் Notification செய்யப்பட்டு ஏறக்குறைய விண்ணப்பித்த 24,000 பேருக்கு சான்றிதழ் சரிபார்ப்பு ஆராயப்பட்டு வந்தது, இந்த நிலையில் 24000 பேருக்கு ஒரே நேரத்தில் ஆன்லைன் தேர்வு எழுத முடியாத காரணத்தினால் 2 முறை எழுத வைத்தால் வினாத்தாள் வெளியாகிவிடும் போன்ற காரணங்களினால் ஒரே நாளில் அவர்களை தேர்வு எழுதுவதற்கு ஒரு பெரிய அமைப்பை பயன்படுத்த வேண்டும் என்று அரசு நினைத்து அந்தவகையில் 27.01.2025 அன்று 2553 மருத்துவர் காலிப்பணியிடங்களுக்கு 24000 மருத்துவர்கள் பங்கேற்கும் ஆன்லைன் தேர்வு நடைபெறவிருக்கிறது. ஆகவே பெரிய அளவில் காலிப்பணியிடங்கள் மருத்துவத்துறையில் உள்ளது போன்ற மாயத் தோற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

காலிப்பணியிடங்கள் உள்ளது என்றே நாங்கள் தொடர்ச்சியாக சொல்லி வருகிறோம். காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு பல்வேறு வழக்குகளையும் நாங்கள் சந்தித்து வருகிறோம். 1066 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கு 38 வழக்குகள், இந்த வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு விரைவில் தேர்வு நடத்துவதற்குரிய பணிகளை தொடங்கியிருக்கிறோம். 2250 கிராம சுகாதார பணியிடங்களை நிரப்புவதற்கு உச்சநீதிமன்றம் வரை 30க்கும் மேற்பட்ட வழக்குகள், இந்த வழக்குகள் தீர்க்கப்பட்டு விரைவில் பணியிடங்கள் நிரப்பப்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல்தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.கே.நாராயணசாமி, உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் ஆர்.லால்வேனா, தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு மருத்துவப்பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் திருமதி.வி.கலையரசி, தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.அரவிந்த், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்ட இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.இராஜமூர்த்தி மற்றும் மருத்துவத்துறை உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றிய வாக்குச்சாவடி பாகமுகவர்கள் ஆய்வுக் கூட்டம் மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் தொகுதி பொறுப்பாளர் அழகிரி சதாசிவம் பங்கேற்று பாகமுகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். நிகழ்ச்சியில் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி மு.கதிரவன் எஸ்.ரமேஷ் மு.பாஸ்கரன் ஒன்றிய செயலாளர் ந.பரிமளம் ஒன்றிய பொறுப்பாளர் டி.மணி, வழக்கறிஞர் அணி த.தங்கதேவன் கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் மு. சுப்பிரமணி, ஜெ.சாந்தி, எஸ். ராமஜெயம், மு. ஜெயசந்திரன் மற்றும் வாக்குச்சாவடி பாகமுகர்கள் பங்கேற்றனர்.

சென்னை, அயனாவரத்தில் அமைந்துள்ள

செல்லியம்மன் திருக்கோயில் குடமுழுக்குத் திருப்பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, நவ.12- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (11.11.2024). சென்னை, அயனாவரம், செல்லியம்மன் திருக்கோயிலில் ரூ.60.75 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தன் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

சென்னை, அயனாவரம், பரசுராம லிங்கேஸ்வரர் திருக்கோயிலின் குழுக் கோயிலான செல்லியம்மன் திருக்கோயிலானது பழமையான திருக்கோயிலாகும். இத்கோயிலுக்கு கடந்த 20.06.2006 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

இத்திருக்கோயிலில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்கு நடத்திட கடந்த 15.07.2024 அன்று பாலாலயம் செய்யப்பட்டு, ரூ.60.75 லட்சம் மதிப்பீட்டில் மூன்று திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் ரூ.35 இலட்சம் செலவில் திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் அமைக்கும் பணி நிறைவு பெறும் நிலையில் உள்ளது. ரூ.25.75 இலட்சம் மதிப்பீட்டில் மகா மண்டபத்தினை உயர்த்திக் கட்டுதல் மற்றும் தரைதளத்தை உயர்த்தி கருங்கல் தரைதளமாக அமைத்தல் போன்ற திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (11.11.2024) இத்திருக்கோயிலுக்கு நேரில் சென்று, அங்கு நடைபெற்று வரும் குடமுழுக்கிற்கான திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கியதோடு, இத்திருக்கோயிலுக்கு பொங்கல் மண்டபம் அமைத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, உதவி ஆணையர் க.செல்வம், திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் ஆர். முரளி பாபு மற்றும் அறங்காவலர்கள் எம்.எஸ்.பழனிசுவாமி, வெ. சபாபதி, வே. மோகன், திருமதி ஜெ.ஈஸ்வரி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் வே.வாசு, திருக்கோயில் செயல் அலுவலர் டி.மூவேந்தன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திரு.வி.க.நகர் தொகுதி வார்டு - 74 க்குட்பட்ட பகுதியில்

இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கம் - பல்நோக்குக் கட்டடம்!

அமைச்சர் பி.கே. சேகர் பாபு திறந்து வைத்தார்!

சென்னை, நவ.12- இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர் பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட புதிய வாழைமா நகரில்

புதிதாக கட்டப்பட்ட இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கம் மற்றும் ஏகாங்கிபுரத்தில் பல்நோக்குக் கட்டடம் ஆகியவற்றைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர் பாபு அவர்கள், மேயர் மேம்பாட்டு நிதியின் கீழ், திரு.வி.க.நகர் மண்டலம்,

வார்டு-74க்குட்பட்ட புதிய வாழைமா நகர், 5வது தெருவில் ரூ.93.25 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கத்தினை இன்று (09.11.2024) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, 74வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட ஏகாங்கிபுரத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, அதில் குழந்தைகள் மையத்தினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர். பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைபடி, திரு.வி.க நகர் தொகுதி 75 வது வட்ட BLA2 பாக முகவர்கள் கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம், அயனாவரம் சிக்னல் ஸ்ரீ சக்தி பார்ட்டி ஹால் 75வது வட்ட கழக செயலாளர் வி.கே. வெங்கடேசன் தலைமையில் கழக துணை அமைப்பு செயலாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. திரு.வி.க.நகர் தெற்கு பகுதி செயலாளர் எம்.சாமிகண்ணு ஆகியோர் முன்னிலையில் தொகுதி பொறுப்பாளர் என்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சிறப்புரையாற்றினர் உடன் சென்னை கிழக்கு மாவட்ட பொருளாளர் இசட் ஆசாத் , இளைஞரணி அமைப்பாளர் டி.லோகேஷ், நா.துலுக்காணம், எல்.ரமணிலோகேஷ், இரா.வீரமணி, பி.சுகுமார், வனஜாசண்முகம், என்.தமிழ்மணி , வெல்டிங் ச.பாபு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காசிமேட்டில் உள்ள ஜீவரத்தினம் நினைவு மண்டபத்தில் மீனவ சமுதாயத்தின் தன்னிகரில்லாத தலைவர் சுயமரியாதை சுடர் " கடல் கடலாளிக்கே "என்று முழங்கியவர் ஐயா என். ஜீவரத்தினம் அவர்களின் 113வதுபிறந்தநாள் விழாவை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பி.சதீஷ்குமார் தலைமையில் வழக்கறிஞர் எஸ்.பி.எஸ்.புத்தன். முன்னாள் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் டில்லி பாபு, ஹரி கிருஷ்ணன், ரங்கா, சுரேஷ், வி.வி.ரமேஷ், சூறாவளி சிவா, முத்தமிழ்செல்வன்,யோகேஷ் ஆகியோர் சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

சென்னை வடக்கு மாவட்டம்
இராயபுரம் மேற்கு பகுதி சார்பில்
கழகத்தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
தளபதி மு.க.ஸ்டாலின்
அவர்களின் ஆணைக்கிணங்க
கழக இளைஞரணி செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
சின்னவர் உதயநிதி ஸ்டாலின்
அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு
மாபெரும் பொதுக்கூட்டம்
நாள் : 12.11.2024 செவ்வாய்க்கிழமை
நேரம் : மாலை 06.00 மணியளவில்
இடம் : தாளமுத்து நடராசர் மன்றம் அருகில், தொப்பை தெரு, இராயபுரம்.
தலைமை
திரு. வ.பெ.சுரேஷ் Ex.MC
இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர்
முன்னிலை
திரு. ஐட்ரீம் இரா.மூர்த்தி MLA
தலைமை செயற்குழு உறுப்பினர் - சென்னை பல்கலைகழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர்
திரு. இரா.செந்தில்குமார் BE
இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர்
M.K.இஸ்மாயில் கு.ரமேஷ் S.திருஞானம் V.மலையம்மாள் E.மதன்
இரா.பாலன் M.ரவி S.புகழேந்தி கொரியர்.P.முருகன் பாலாலட்சுமணன் J.கௌரீஸ்வரன்
சிறப்புரை
திரு. திண்டுக்கல் I.லியோனி
மாநில கொள்கை பரப்புச் செயலாளர் / தலைவர் - தமிழ்நாடு பாடநூல் கழகம்
திரு. அ.தா.டெக்சின் ரொமேரியோ
திமுக இளம்பேச்சாளர்
உயர்திரு. ஆர்.டி.சேகர் B.Com.,B.L.,MLA.,
சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர்
டாக்டர் திரு. கலாநிதி வீராசாமி MP
மாநில அயலக அணி தலைவர் / MS.,FRCS(Edin)M.Ch(Plastic)
டாக்டர் திரு. அ.சுபேர்கான் MBBS.,MS (Ortho)
இராயபுரம் தொகுதி பார்வையாளர் / மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு செயலாளர்
தா.இளையஅருணா B.E.,MC ந.மனோகரன் P.T.பாண்டிச்செல்வம்
இரா.வெற்றிவீரன் S.R.கமலக்கண்ணன் மு.கோபி க.நாகம்மை V.தயாளன் கி.ராஜேந்திரன் நா.சண்முகம் வே.சிவகுமார்
V.விஜயலஷ்மிவிஜயகுமார் MC கீதாசுரேஷ் MC பா.வேளாங்கண்ணி MC
நிகழ்ச்சி ஏற்பாடு : இராயபுரம் மேற்கு பகுதி தி.மு.க